
அஷ்டலக்ஷ்மி

நீதிக் கதைகள்

1



வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு.	ஆனால் அடிமையாகிவிடாதே!
இரக்கங்காட்டு.	ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு.	ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு.	ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு.	ஆனால் கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு.	ஆனால் போக்கிரியாய் இராதே!
சுறுசுறுப்பாய் இரு.	ஆனால் பதட்டப்படாதே.
தர்மம் செய்.	ஆனால் ஆண்டியாகி விடாதே!
பொருளைத் தேடு.	ஆனால் பேராசைப்படாதே!
உழைப்பை நம்பு.	ஆனால் கடவுளை மறந்து விடாதே!

www.lkedu.lk

அறநெறிப் பாடசாலை
ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயம்
அரியாலை - யாழ்ப்பாணம்
பதிவு இல - HA/7/56/14/271

அஷ்டலக்ஷ்மி

நீதிக் கதைகள்

ஊக்கமது கைவிடேல்



அன்பளிப்பு


1


[illegible]
இராமியர் [illegible]
[illegible]


வடிவமைப்பு : செ.முரளிதரன்
சித்திரங்கள் : காயத்திரி டிசைனர்ஸ்
சிவகாசி.

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொ.பே: 011 - 2334004.

1. பேராசை பெருநட்டம்







1. பேராசை பெருநட்டம்

1. ஒரு குடியானவன் நிறைய வாத்துகள் வளர்த்து வந்தான்.

2. அவ்வாத்துகளில் ஒன்று பெரியதாய் இருந்தது. அவ்வாத்து முட்டையிட்டது. ஆச்சரியம் அது பொன்முட்டை. அது கண்ட குடியானவன் வியப்பில் மூழ்கினான்.

3. பொன் முட்டைகளை அதிக விலைக்கு விற்று பெரிய தனவந்தன் ஆனான். தன் தொழிலை விட்டு விட்டான்.

4. ஒரு நாள் அக்குடியானவன் அப்பெரிய வாத்தை மடியில் வைத்து சிந்தனையில் ஆழ்ந்தான்.


5. சிறிது நேரம் கழிந்து வாத்தின் வயிற்றை அறுத்து எல்லா முட்டைகளையும் ஒன்றாய் எடுக்க நினைத்தான். கத்தி கொண்டு வாத்தின் வயிற்றை அறுத்தான். அந்தோ பரிதாபம்! வாத்தின் வயிற்றில் ஒரு முட்டைகூட இல்லை.


6. பேராசையால் கிடைத்து வந்ததையும் இழந்து மிக வருந்தினான்.


" அளவுக்கு அதிகமாக ஆசை கொள்ளாதே "

www.kedu.lk

2. நரியின் தந்திரம்







Kalvi Ulaku

2. நரியின் தந்திரம்

1 காட்டில் மான் ஒன்று இறந்து கிடந்தது.

2. இது கண்ட சிங்கம் ஒன்றும் ஒரு கரடியும் அம்மானைத் தின்ன ஒரே சமயத்தில் வந்தன.

3. மானுக்காக அவைகள் சண்டையிட்டன. இரண்டும் வெகுநேரம் மும்முரமாய் சண்டையிட்டன.

4. தற்செயலாய் அங்கு வந்த நரி ஒன்று இதைக் கவனித்தது.

5. சண்டையினால் களைத்த சிங்கமும் கரடியும் நிற்க முடியாமல் ஓய்ந்து கீழே விழுந்தன.

6. இது கண்ட நரி மான் இருக்கும் இடம் சென்று அதைத் தின்ன ஆரம்பித்தது.

7. வெகுநேரம் தன் வயிறு நிரம்ப அம்மானைத் தின்று தீர்த்தது.

8. தின்று முடிந்ததும் நரி அவ்விடமிருந்து சென்றது. இதைக் கவனித்த கரடியும் சிங்கமும் தமது அறிவின்மையை நினைத்து வருந்தின.

" ஒற்றுமையே பலமாகும் "

www.kedu.lk

3. முயலின் தந்திரம்



3. முயலின் தந்திரம்

1. காட்டில் பெரிய சிங்கம் ஒன்று இருந்தது. அது கண்டபடி மிருகங்களைக் கொன்று தின்றது.

2. மிருகங்கள் ஒன்று கூடி சிங்கத்திடம் சென்றன. தம்மைக் கண்டபடி கொல்ல வேண்டாம் தினமும் ஒரு மிருகம் அதற்கு இரையாக வருவதாய்ச் சொல்லின. சிங்கமும் அதற்குச் சம்மதித்தது. அன்று முதல் தினம் ஒரு மிருகம் சிங்கத்திற்கு இரையாகச் சென்றது.

3. ஒரு நாள் முயல் ஒன்றின் முறை. முயல் சிங்கத்திடம் தாமதித்துச் சென்றது. சிங்கம் கோபத்தால் கர்ஜித்தது. வழியில் மற்றொரு சிங்கம் இருந்ததால் தாமதம் என்றது முயல். சிங்கம் கோபத்துடன் அச்சிங்கம் இருக்கும் இடத்தைக் கேட்டது.

4. முயலும் மற்றொரு சிங்கம் இருக்கும் இடத்தைக் காண்பிப்பதாய்ச் சொல்லி சிங்கத்தை அழைத்துச் சென்றது.


5. வழியில் பெரிய கிணறு ஒன்றைக் காட்டியது. அதனுள் அச்சிங்கம் இருப்பதாகச் சொல்லிற்று. சிங்கமும் கிணற்றினுள் எட்டிப் பார்த்தது. அதன் உருவம் கிணற்று நீரில் தெரிந்தது.

6. தன் உருவத்தை மற்றொரு சிங்கம் என்று நினைத்து அதைத் தாக்க கோபத்துடன் கிணற்றுள் குதித்தது. சேற்றில் அமுங்கி வெளிவர முடியாமல் இறந்தது. முயலின் தந்திரத்தால் மற்ற மிருகங்கள் உயிர் தப்பின.

Kalvi Ulaku

" புத்திமான் பலவான் "

4. சிங்கமும் எருதுகளும்



4. சிங்கமும் எருதுகளும்

1. நான்கு எருதுகள் ஒற்றுமையுடன் இருந்தன. ஒன்றாய்ச் சேர்ந்தே காட்டில் மேய்ந்து வந்தன.

2. அக்காட்டிலுள்ள சிங்கம் ஒன்று இவ்வெருதுகளைக் கொன்று தின்ன விரும்பியது.

3. சிங்கம் திடீரென்று அவ்வெருதுகளின் மேல் பாய்ந்தது.

4. ஆனால் எருதுகள் ஒன்றுகூடிச் சிங்கத்தை எதிர்த்தன. தமது கொம்புகளால் அதை முட்டித் துரத்தின.

Kalvi Ulaku

5. சிலநாட்களில் அவ்வெருதுகள் தமக்குள் சண்டையிடத் தொடங்கின.


6. சண்டையின் காரணத்தால் தனித்தனியே மேய ஆரம்பித்தன.


7. இதை எதிர்பார்த்த சிங்கம் எருதுகளை ஒவ்வொன்றாகக் கொன்று தின்றது.


8. இவ்வாறு சிங்கம் நான்கு எருதுகளையும் கொன்று தின்றது.

" ஒன்று பட்டால் உண்டு வாழ்வு "

5. எறும்பும் புறாவும்







5. எறும்பும் புறாவும்

1. கட்ட எறும்பு ஒன்று தண்ணீரில் விழுந்து தத்தளித்தது.

2. அருகில் மரத்தின் மேல் இருந்த புறா ஒன்று இதைக் கவனித்தது. எறும்பிற்கு உதவி செய்ய நினைத்தது.

3. ஒரு பெரிய இலையைத் தனது அலகால் பறித்து எறும்பின் அருகில் விழும்படிச் செய்தது.

4. எறும்பும் அந்த இலையின்மீது ஏறி கரை ஒதுங்கித் தப்பியது.

5. சிறிது நேரம் சென்று அவ்விடம் வேடன் ஒருவன் வந்தான். அவன் அப்புறாவைக் கண்டான்.

6. புறாவை அடிக்கத் தனது வில்லையும் அம்பையும் எடுத்துக் குறிபார்த்தான்.


7. இது கண்ட எறும்பு கலங்கிற்று. வேகமாகச் சென்று வேடனது காலில் கடித்தது.

8. எறும்புக் கடியின் வலி பொறுக்காமல் வேடனது குறி தவறியது. சத்தம் கேட்ட புறாவும் தப்பிப் பறந்து சென்றது.

" உபகாரம் வீண் போகாது "

www.kedu.lk

6. தவளையும் எருதும்







Kalvi Ulaku

6. தவளையும் எருதும்

1. ஒரு புல்வெளியில் இரண்டு குட்டித் தவளைகள் விளையாடிக் கொண்டிருந்தன.

2. அப்பொழுது அங்கு ஒரு எருது புல் மேய வந்தது. தற் செயலாய் ஒரு குட்டித் தவளை எருதின் காலில் மிதிபட்டு, நசுங்கி இறந்தது.

3. உடனே மற்றொரு குட்டித்தவளை வேகமாய்க் குதித்துச் சென்றது. தன் தாயாரிடம் சென்று இதைப்பற்றிச் சொல்லிற்று. பெரிய தவளை குட்டியிடம் எருது எவ்வாறு இருக்கும் என்று கேட்டது.

4. குட்டித் தவளை, எருது மிகப் பெரியதாய் இருக்கும் என்று கூறிற்று. தாயும் தன் உடலைச் சற்றுப் பெரிதாக்கிக் காண்பித்து, "இவ்வளவு பெரியதாய் இருக்குமா" ? என்றது.


5. குட்டித் தவளை இன்னும் பெரியது என்றது. தாயும் தனது உடலை மேலும் பெரிதாக்கிக் கொண்டு இவ்வளவு பெரிதா? என்றது.

6. குட்டி " இன்னும் பெரியது " என்றது. தாயும் தன் உடலை மேலும் பெரிதாக்க முயற்சித்தது. ஆனால் அந்தோ பரிதாபம் அதன் உடல் வெடித்து இறந்தது. குட்டியும் அதிர்ச்சியடைந்தது.

" உனது பலத்தை அதிகமாக எடை போடாதே "

www.kegan.lk

7. ஆமையும் முயலும்



7. ஆமையும் முயலும்

1. ஓர் ஆமையும் ஒரு முயலும் சந்தித்தன. இருவருள் யார் வேகமாய் ஓடக்கூடியவர்கள் என்று விவாதித்தன. ஒரு பந்தயம் பிடித்து ஓட ஆரம்பித்தன.

2. குறித்த இடத்திலிருந்து இரண்டும் ஓட ஆரம்பித்தன.

3. ஆமை மெதுவாய் நகர்ந்து சென்றது.

4. ஆமையை எப்படியும் வென்று விடலாம் என்ற நம்பிக்கையில் வழியில் முயல் ஒரு மரத்தடியில் படுத்து உறங்கியது.


5. ஆமை மெதுவாய் நகர்ந்து சென்று எல்லையை நெருங்கியது.


6. திடீரென்று விழித்தெழுந்த முயல், ஆமை எல்லையை நெருங்கி விட்டதைக் கண்டு வேகமாய்த் தாவிக் குதித்து ஓடிற்று. ஆனால் அதற்குள் ஆமை எல்லையை அடைந்து வெற்றியடைந்தது. அன்று முதல் முயலின் கர்வம் குறைந்தது.


" வீழ்ச்சிக்கு முன் தற்பெருமை வரும் "

www.lkedu.lk

8.ஓநாயும் ஆட்டுக்குட்டியும்







Kalvi Ulaku

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

01. ஓர் ஓநாயும் ஓர் ஆட்டுக்குட்டியும் காட்டு ஓடை ஒன்றில் நீர் குடிக்க வந்தன இரண்டும் நேரில் சந்தித்தன

02. ஓநாய் ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்ன நினைத்தது. அது ஆட்டுக்குட்டியிடம் "ஏன் நான் குடிக்கும் நீரை நீ கலக்குகிறாய்? என்றது.

03. அதற்கு ஆட்டுக்குட்டி தங்களிடமிருந்து நீர் எனக்கு வருகிறது. நான் எப்படிக் கலக்கமுடியும்? என்றது.

04. மறுபடியும் ஓநாய் ஆட்டுக்குட்டியிடம், நீ ஏன் இரண்டு மாதங்களுக்கு முன்பு என்னைத் திட்டினாய்? என்றது. அதற்கு ஆட்டுக்குட்டி நான் பிறந்து ஐம்பது நாட்கள்தான் ஆகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன் நான் பிறக்கவில்லையே. தங்களை எப்படி அப்பொழுது திட்டியிருக்க முடியும்? என்றது.

05. நீ திட்டாவிடில் உன் தகப்பன் திட்டியிருக்கலாம். என்ன சொல்கிறாய்? என்றது ஓநாய். வருத்தத்துடன் ஆட்டுக்குட்டி பேசாமல் இருந்தது.

06. ஓநாய் அதுதான் சமயமென ஆட்டுக்குட்டியின் மேல் பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

"எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்"

Kalvi Ulaku



Kalvi Ulaku

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
விலை.100/-
தொ.பே: 011 - 2334004.
Email: australuxme@yahoo.com, Web:www.astraluxumie.com